# பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம்.

*மாற் 1:8 நான் ஜலத்தினால் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்தேன்; அவரோ பரிசுத்த ஆவியினால் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பார் என்று பிரசங்கித்தான்.*

வேதாகமத்தில் "பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம்" என்பது, " ஒரு விசுவாசி கேட்கும்போது தேவனுடைய செய்கையால் பரிசுத்த ஆவியானவர் அவ்விசுவாசியினுள் வந்து அவருக்குள் நிரந்தரமாக தங்கியிருக்கும் நிகழ்வை" குறிப்பிடுகிறது.

## பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானத்துக்கு வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வேறு சில பெயர்கள்.

**பிதாவின் வாக்குத்தத்தம்.** *லூக்கா 24:49, அப். 1:5, 2:39.*
**உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படுதல்.** *லூக். 24:49.*
**பெலனடைதல்** *அப். 1: 8.*
**பரிசுத்த ஆவியினாலே ஞானஸ்நானம்.***மத்; 3:11, மாற்கு; 1.8, லூக்கா; 3; 16, யோவான்; 1:33. அப்.1:4, 11:16.*
**பரிசுத்த ஆவியினால் நிரப்பப்படுதல்.** *அப்;.4;31.*
**பரிசுத்த ஆவியைப்பெற்றுக்கொள்ளுதல்;** *அப்; 8; 15-17, 19;2, யோவான்; 7;39.*
**பரிசுத்த ஆவியானவர் இறங்குவது;** *அப்; 11;15, 10;44.*
**பரிசுத்த ஆவி அவர்கள் மேல் வந்தார்;** *அப்; 19;6.*
**பரிசுத்த ஆவியினால் அபிஷேகம்.** *லூக்கா 4:18; ஏசாயா 61:1; அப் 4:28; 10:38; 1 யோவான் 2:20,27.* இங்கே **"அபிஷேகம்"** என்ற வார்த்தையை நாம் சற்று கவனமாக உபயோகிப்பது நல்லது. வேதாகமத்தில், முக்கியமாக புதிய ஏற்பாட்டில் "அபிஷேகம்" "anoint" என்ற வார்த்தைக்கு பல கிரேக்க வார்த்தைகள் உபயோகப்படுத்தப் பட்டுள்ளன. அதில் இரண்டு முக்கிய வார்த்தைகள் **"aleipho", "chrio".** இவற்றில் "aleipho" என்னும் வார்த்தை **"எண்ணெய் பூசுவது"** என்ற அர்த்தத்திலேயே உபயோகப்படுத்தப்பட்டுள்ளது *( மாற்கு 6:13; யாக் 5:14; லூக்கா 7:46; மத் 6:17; மாற்கு 16:1; யோவான் 11:2, 12:3 ).* இவ்வசனங்களை சிலர் எடுத்து, (தண்ணீர் முழுக்கு) ஞானஸ்நானத்தையும் அபிஷேகத்தையும் ஒரே அர்த்தத்தை குறிக்கிற வார்த்தைகள் என்று மனதிலாக்கிக்கொண்டு, ஞானஸ்நானம் என்றால் "பூசுவது" என்றும் எடுத்துக்கொள்ளலாம் என்று எண்ணி, ஞானஸ்நானம் என்றால் "தெளிப்பு ஞானஸ்நானத்தையும்" குறிக்கலாம் என்று தவறாக வாதிடுவதுண்டு. இதற்கு வேதாகமத்தில் ஆதாரம் இல்லை. இதற்கு நம் வார்த்தைகள் காரணமாக இல்லாமல் பார்த்துக்கொள்வது நல்லது. புதிய ஏற்பாட்டில் "அபிஷேகம்" "anoint" என்ற வார்த்தைகளுக்கு உபயோகப்படுத்தப்பட்டுள்ள மற்றொரு வார்த்தை **"Chrio"** . இந்த வார்த்தை "எண்ணெய் பூசுவது" என்ற அர்த்தத்தில் உபயோகப்படுத்தப்படவில்லை. இவ்வார்த்தைதான் *லூக்கா 4:18; அப் 4:28; 10:38; 1 யோவான் 2:20,27* ஆகிய இடங்களில் "பரிசுத்த ஆவியால் ஞானஸ்நானம்" என்ற அர்த்தத்தை குறிப்பிடும்படியாக உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. சில வேத பண்டிதர்கள் இவ்வசனங்கள் மாத்திரமே பரிசுத்த ஆவியால் ஞானஸ்நானத்தை குறிப்பிடுகின்றன என்றும் கூறுவதுண்டு.

( குறிப்பு; வேதாகமத்தில், பரிசுத்த ஆவியினால், பரிசுத்த ஆவிக்குள், பரிசுத்த ஆவியைக்கொண்டு **( by, with, in , by means of** ) ஞானஸ்நானம் (Baptism) அல்லது அபிஷேகம் (anointing) போன்ற வார்த்தைகளுக்கான கிரேக்க வார்த்தைகள் மற்றும் வேதாகமத்தில் அவை குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் உபயோகப்படுத்தப்பட்டுள்ள இலக்கணம் போன்றவற்றை ஆழ்ந்து படிக்கும்போது அவைகள் நாம் வழக்கமாக விசுவாசிப்பதற்கு மாறாக பல கருத்துக்களை கூறுவதாக உள்ளன. ஆனாலும் "மரமானது கனியினால் அறியப்படும்" என்ற வேதாகம அடிப்படை தத்துவத்தின் மேலேயும் " ஆவிக்குரிய அர்த்தங்களுக்கு " அதிக முக்கியத்துவம் கொடுத்தும், எல்லாவற்றுக்கும் மேலாக பரிசுத்த ஆவியானவரின் வெளிப்பாடுகள், வழிநடத்துதல், ஒப்புதலின் அடிப்படையிலும் இந்த வேத பாடம் தயாரிக்கப்பட்டுள்ளது. உங்களில் யாருக்கேனும் அதிக கிரேக்க மொழி விளக்கங்கள், அர்த்தங்கள், விளக்கவுரைகள் தேவைப்பட்டால் என்னோடு தொடர்பு கொள்ளவும், 20 க்கும் அதிகமான நீண்ட விளக்கவுரைகளை நான் உங்களுக்கு அனுப்பி தருகிறேன்.)

இந்த பெயர்கள் அனைத்தும் " இரட்சிக்கப்பட்ட ஒரு மனிதர் பரிசுத்த ஆவியானவரைப்பெற்றுக்கொண்டு, பரிசுத்த ஆவியானவர் அவரது ஆவியில் சேர்ந்து நிரந்தரமாக இருப்பதை" குறிப்பிடுகிறது. இது முற்றிலுமாக ஒரு ஆவிக்குரிய அனுபவம். இந்த அனுபவத்தின் வெளிப்பாடுகளை ஆத்துமா அல்லது சரீரத்தில் அனுபவிக்கவும் முடியும், அப்படி அனுபவிக்காமல் இருக்கவும் முடியும். நம்முடைய அனுபவத்தை வைத்து மாத்திரம் இது சத்தியம் அல்லது சத்தியம் அல்ல என்று ஏற்றுக்கொள்வது சரியல்ல, வேதவசனம் சொல்வதால் இது என் ஆவியில் நடந்திருக்கிறது என்று ஏற்றுக்கொள்வதே சரி. இதன் பின் அம்மனிதர் ஒரு சாதாரண விசுவாசியாக இல்லாமல், பரிசுத்த ஆவியானவரின் ஆளுகையின் கீழ், அவரது வழி நடத்துதலின்படி, அவரின் வல்லமையினால் வேதவசனம் சொல்கிற படி ஒரு வெற்றியுள்ள விசுவாசியாக, இயேசுவுக்கு ஒரு நல்ல சாட்சியாக வாழ முடியும்.

இதற்கு ஒரு நல்ல முன்னுதாரணம் இயேசு கிறிஸ்து. அவர் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தை பெற்றுக் கொண்ட பிறகே ஒரு வல்லமையான, அற்புதங்கள் அடையாளங்கள் நிறைந்த, தேவனுடைய சித்தத்தை பூரணமாக தன் வாழ்க்கையில் நிறைவேற்றுகிற, சாத்தானை எல்லா சந்தர்ப்பங்களிலும் தோற்கடித்தவராக, நோய்களை துன்பங்களை துயரங்களை விரட்டுகிறவராக வாழ முடிந்தது *( மத் 3:16-17; மாற்கு 1:10; லூக்கா 3:22 ).* இயேசு இக்காரியங்களை எல்லாம் பரிசுத்த ஆவியின் வல்லமையினாலேயே செய்தார், தன்னுடைய தெய்வீக சுபாவத்தினை உபயோகித்து செய்ய வில்லை *( ஏசாயா 11:2; 42:1-7; 61:1-2; மத் 3:16-17; யோவான் 3:34; அப் 10:38 ).* ஒருவர் மறுபடியும் பிறக்கும்போது தெய்வ சுபாவத்துக்கு பங்குள்ளவராகிறார், ஆனாலும் அதனால் அவர் வல்லமையான காரியங்களை செய்ய முடியாது. அவர் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தை பெற்றுக்கொண்ட பிறகே ஒரு வல்லமையான வாழ்க்கை வாழ முடியும் *( 1 கொரி 12:4-11; லூக்கா 24:49: அப் 1:4-8 ).* அதனால்தான் இயேசு பல இடங்களிலும் இந்த பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தை பற்றி சொல்லி இருக்கிறார் *( யோவான் 7:37-39; 14:12-17, 26; 15:26; 16:7-15 ).*

அப்.பவுல்....பரிசுத்த ஆவியின் ஞானஸ் நானம் பெற்றுக்கொண்டவர். *(அப்; 9; 17-18 ).*

இயேசுவின் சீஷர்கள் அனைவரும் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டவர்கள். பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானம் இயேசுவின் சீஷர்களை எப்படி மாற்றி, பின் அவர்களது வல்லமையான ஊழியத்தினால் நாம் இன்று இயேசுவின் ஆசீர்வாதங்களில் ஜீவிக்கும்படியாக ஆக்கியது என்று இப்போது பார்ப்போம்.

*மத்தேயு; 25;26.........அப்பொழுது, சீஷர்களெல்லாரும் அவரைவிட்டு ஓடிப்போனார்கள்.* இயேசுவோடு சுமார் மூன்றரை வருடங்கள் ஜீவித்து அவரது அற்புதங்களையும் அடையாளங்களையும், தேவனுடைய சாட்சியையும் கண்ட விசுவாசிகள் இந்த சூழ்நிலையில் அவரை கைவிட்டு ஓடி விட்டார்கள். பேதுரு இயேசுவை மறுதலிக்கிறான். பின் இதே சீஷர்களிடம், உயிர்த்தெழுந்த இயேசு தன் பூலோக ஊழியத்தை முடித்து விட்டு செல்வதற்கு முன் சொல்லுகிறார்.....

*மாற்கு; 16;15; பின்பு, அவர் அவர்களை நோக்கி: நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்.*
*மத் 28:18 அப்பொழுது இயேசு சமீபத்தில் வந்து, அவர்களை நோக்கி: வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. 19 ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து, 20 நான் உங்களுக்குக் கட்டளையிட்டயாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம்பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார். ஆமென்.*

இப்படி சொன்னதன் மூலம் ஒரு பெரிய பொறுப்பை, தன் மணவாட்டி சபையின் எதிர் காலத்தை, சில சாதாரண மனிதர்களிடம் ( அதாவது ஒரு முக்கிய கட்டத்தில் தன்னை விட்டு ஓடிப்போன கோழைகளிடம் ) ஒப்படைக்கிறார். இயேசு, தன் இரத்தத்தால் மீண்டெடுத்த மனுக்குலத்துக்கு, இரட்சிப்பின் சுவிசேஷத்தை பிரசங்கித்து தேவனுடைய அநாதி தீர்மானத்தை நிறைவேற்றும்படியான மகாப்பெரிய பொறுப்பை இவர்களிடம் கொடுக்கிறார். இவர்கள் தவறிப்போனால் தேவனுடைய மீண்டெடுப்பின் சத்தியம் உலகத்துக்கு சரிவர தெரியாமல் போய்விடலாம். இயேசு கிறிஸ்துவின் மரணத்தின் உபயோகம் மனுக்குலத்துக்கு தெரியாமல் போய்விடலாம். இவர்களால் இந்த பெரிய பொறுப்பை நிறைவேற்ற முடியுமா ? நிச்சயமாக அவர்களது சொந்த முயற்சியால் - வாழ்க்கையால் முடியாது...ஆனால் அவர்களை மாற்றி அவர்களை உலகத்தின் மாபெரும் சாட்சிகளாக ஆக்குவதற்கு இயேசு வேறொரு திட்டம் வைத்திருந்தார். அந்த திட்டத்தை அப்போஸ்தலர் முதலாம் அதிகாரத்தில் அவர்களிடம் சொல்கிறார். *அப்; 1; 5. ஆகையால் நீங்கள் எருசலேமை விட்டுப் போகாமல் என்னிடத்தில் கேள்விப்பட்ட பிதாவின் வாக்குத்தத்தம் நிறைவேறக் காத்திருங்கள் என்று கட்டளையிட்டார்.*

முன்பே *யோவான் 16;7. " தேற்றரவாளனை உங்களுக்கு அனுப்புவேன் "* என்று வாக்குத்தத்தம் பண்ணி இருந்தார்.

*அப்; 1;4.*ல் பிதாவின் வாக்குத்தத்தத்தை மீண்டும் உறுதி படுத்துகிறார். அந்த வாக்குத்தத்தம் **"பரிசுத்த ஆவியினாலே ஞானஸ் நானம் பெறுவீர்கள்"** என்பது. *அப் 1:4 அன்றியும், அவர் அவர்களுடனே கூடி வந்திருக்கும்போது, அவர்களை நோக்கி: யோவான் ஜலத்தினாலே ஞானஸ்நானங் கொடுத்தான்; நீங்கள் சில நாளுக்குள்ளே பரிசுத்தஆவியினாலே ஞானஸ்நானம் பெறுவீர்கள்.*

தொடர்ந்து இயேசு, பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தை சீஷர்கள் பெறும்போது என்ன நடக்கும் என்று சொல் சொல்கிறார். *அப்; 1.8. பரிசுத்தஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிபரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார்.*

**இயேசு கூறிய அனைத்தும் பின் அப்படியே சம்பவித்தது.**

*அப்; 2; 1-4. 1. பெந்தெகொஸ்தே என்னும் நாள் வந்தபோது, அவர்களெல்லாரும் ஒருமனப்பட்டு ஓரிடத்திலே வந்திருந்தார்கள். 2. அப்பொழுது பலத்த காற்று அடிக்கிற முழக்கம்போல, வானத்திலிருந்து சடிதியாய் ஒரு முழக்கமுண்டாகி, அவர்கள் உட்கார்ந்திருந்த வீடு முழுவதையும் நிரப்பிற்று. 3. அல்லாமலும் அக்கினிமயமான*

*நாவுகள்போலப் பிரிந்திருக்கும் நாவுகள் அவர்களுக்குக் காணப்பட்டு, அவர்கள் ஒவ்வொருவர் மேலும் வந்து அமர்ந்தது. 4. அவர்களெல்லாரும் பரிசுத்தஆவியினாலே நிரப்பப்பட்டு, ஆவியானவர் தங்களுக்குத் தந்தருளின வரத்தின்படியே வெவ்வேறு பாஷைகளிலே பேசத்தொடங்கினார்கள்.*

இந்த பரிசுத்த ஆவியின் ஞானஸ் நானத்தினால் ஒரு பெரிய மாற்றம் அவர்களது வாழ்க்கையில் சம்பவித்தது. இச்சம்பவத்துக்கு பிறகு சீஷர்கள் அதற்கு முன்பு இருந்ததை போல இருக்க வில்லை. அவர்களது வாழ்க்கையில் நடந்த சில மாற்றங்களை பார்ப்போம்.

**பரிசுத்த ஆவியின் ஞானஸ் நானம் பெறும் முன்பு பேதுரு..........**

***யோவான் 18;*** *17. அப்பொழுது வாசல்காக்கிற வேலைக்காரி பேதுருவை நோக்கி: நீயும் அந்த மனுஷனுடைய சீஷரில் ஒருவனல்லவா என்றாள். அவன்: நான் அல்ல என்றான். 25. சீமோன்பேதுரு நின்று குளிர்காய்ந்துகொண் டிருந்தான். அப்பொழுது சிலர் அவனை நோக்கி: நீயும் அவனுடைய சீஷரில் ஒருவனல்லவா என்றார்கள். அவன்: நான் அல்ல என்று மறுதலித்தான். 27. அப்பொழுது பேதுரு மறுபடியும் மறுதலித்தான்;உடனே சேவல்கூவிற்று.*

**பரிசுத்த ஆவியின் ஞானஸ் நானம் பெற்ற பிறகு... பேதுரு.**

***அப்; 2;14*** *அப்பொழுது பேதுரு பதினொருவரோடுங்கூட நின்று, அவர்களை நோக்கி, உரத்த சத்தமாய்: யூதர்களே, எருசலேமில் வாசம்பண்ணுகிற ஜனங்களே நீங்களெல்லாரும் அறிந்து கொள்வீர்களாக, என் வார்த்தைகளுக்குச் செவிகொடுங்கள். 22. இஸ்ரவேலரே, நான் சொல்லும் வார்த்தைகளைக் கேளுங்கள்; நீங்கள் அறிந்திருக்கிறபடி நசரேயனாகிய இயேசுவைக்கொண்டு தேவன் உங்களுக்குள்ளே பலத்த செய்கைகளையும், அற்புதங்களையும், அடையாளங்களையும் நடப்பித்து, அவைகளினாலே அவரை உங்களுக்கு வெளிப்படுத்தினார். 23. அப்படியிருந்தும், தேவன் நிர்ணயித்திருந்த ஆலோசனையின்படியேயும், அவருடைய முன்னறிவின்படியேயும் ஒப்புக்கொடுக்கப்பட்ட அந்த இயேசுவை நீங்கள் பிடித்து, அக்கிரமக்காரருடைய கைகளினாலே சிலுவையில் ஆணியடித்துக் கொலைசெய்தீர்கள்.*

முன்பு யூதர்களுக்கு பயந்திருந்த பேதுரு, அவர்கள் முன் தைரியமாக நின்று நீங்கள்தான் இயேசுவை சிலுவையில் அறைந்து கொன்றீர்கள் என்று வல்லமையாக கூறுகிறார். இயேசுவே மேசியா என்று வல்லமையாக சாட்சி கொடுக்கிறார். அதைக்கேட்டு 3000 பேர் வசனத்தை ஏற்றுக்கொண்டார்கள், ரட்சிக்கப்படார்கள்.

***அப்; 2 ;*** *41. அவனுடைய வார்த்தையைச் சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டவர்கள் ஞானஸ்நானம் பெற்றார்கள். அன்றையத்தினம் ஏறக்குறைய மூவாயிரம்பேர் சேர்த்துக்கொள்ளப்பட்டார்கள்.* அற்புதங்கள்இ அடையாளங்கள். ***அப் 2*** *43. எல்லாருக்கும் பயமுண்டாயிற்று. அப்போஸ்தலர்களாலே அநேக அற்புதங்களும் அடையாளங்களும் செய்யப்பட்டது.*

எராளமான ஜனங்கள் ரட்சிக்கப்பட்டு சபையில் சேர்த்துக்கொள்ளப்பட்டார்கள். ***அப்; 2;47.*** *தேவனைத் துதித்து, ஜனங்களெல்லாரிடத்திலும் தயவுபெற்றிருந்தார்கள். இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அநுதினமும் சபையில் சேர்த்துக்கொண்டு வந்தார்.* ***( அப்; 2;37, 41, 42, அப்; 4; 18 -20.)***

எல்லாவற்றுக்கும் மேல், தைரியமாக, பயமின்றி, உபத்திரவங்களையும், மரணத்தையும் எதிர் கொண்டார்கள். ***அப்; 5; 16-18, 27-33.***

இயேசுவோடு மூன்றரை வருடம் சேர்ந்து வாழ்ந்தது, அவரின் அற்புதங்களை, அடையாளங்களை பார்த்தது, அவர் உபதேசங்களை கேட்டது, படித்தது அவர்களை மாற்ற வில்லை.....ஆனால் "பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் " அவர்களை இப்படி வல்லமையாய், உலகை தலை கீழாய் மாற்றுபவர்களாய் மாற்றியது.

ஆதி சபையில், பரிசுத்த ஆவியின் ஞானஸ் நானம் சகஜமாக இருந்தது. வழக்கமாக அவர்கள் ரட்சிக்கப்படும் போதே பரிசுத்த ஆவியின் ஞானஸ் நானம் பெற்றுக்கொண்டார்கள். பரிசுத்த ஆவியின் ஞானஸ் நானம் பெறாத விசுவாசிகளின் தலைகளில் அப்போஸ்தலர் கரங்களை வைத்து ஜெபித்த போது அவர்கள் பரிசுத்த ஆவியின் ஞானஸ் நானத்தை பெற்றுக்கொண்டார்கள்.

***அப்; 8;16-17.*** *16. அவர்கள் பரிசுத்தஆவியைப் பெற்றுக்கொள்ளும்படி அவர்களுக்காக ஜெபம்பண்ணி, 17. அவர்கள்மேல் கைகளை வைத்தார்கள், அப்பொழுது அவர்கள் பரிசுத்தஆவியைப் பெற்றார்கள்.* ***(அப்; 19;2, 19;6.)***

இயேசு கற்பித்த, பெற்றுக்கொண்ட, அப்போஸ்தலர் கற்பித்த, பெற்றுக்கொண்ட பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் எல்லா விசுவாசிகளுக்கும் உரியது. பரிசுத்த ஆவியினால் ஞானஸ் நானம் பெற்றுக்கொண்ட ஒரு விசுவாசியால் மாத்திரமே ஒரு வல்லமையான விசுவாச வாழ்க்கை வாழ முடியும். பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் இல்லாமல் வாழுகிற கிறிஸ்தவ வாழ்க்கை ஆயுதங்கள் ஏதும் இன்றி போருக்கு செல்வதை போன்றது.

## பரிசுத்த ஆவியினால் ஞானஸ் நானம் பெற்றுக்கொள்ளும்போது, பரிசுத்த ஆவியானவர் நமக்கு செய்கிற காரியங்களில் சில.

1. பரிசுத்த ஆவியானவர் நம்மோடு என்றன்றைக்கும் இருப்பார். ***எபே; 1;13,14, எபிரேயர்; 13;5. ரோமர்; 8; 35-39. யோவான்; 14;16;***

2. பரிசுத்த ஆவியானவர் .... நம் ஆசிரியராக இருந்து....எல்லாவற்றையும் போதித்து....இயேசு சொன்ன எல்லாவற்றையும் நினைப்பூட்டுவார். *யோவான்; 14; 26.*
3. நாம் இயேசுவின் சாட்சிகளாக இருக்க உதவி செய்வார். *யோவான்; 15; 26 -27; அப்; 1;8;*
4. சகல சத்தியத்திற்குள்ளும் நம்மை நடத்துவார்....வரப்போகிற காரியங்களை நமக்கு அறிவிப்பார். *அப்; 16; 12.*
5. இயேசுவுக்கு நல்ல சாட்சிகளாக இருக்க பெலன், வல்லமை தருவார்; *அப்; 1;8.;*
6. பரிசுத்த ஆவியானவர் நம் தேற்றரவாளனாக (encourager) இருப்பார். *யோவான்; 14;16.*
7. பரிசுத்த ஆவியானவர் நமக்கு " **ஆவிக்குரிய வரங்களை** " தருவார். *1 கொரி 12:8-11; 12:28-29; எபே 4:13; ரோமர் 12:6-8.*
8. அந்நிய பாஷை வரம்; பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தை பெற்றுக்கொள்ளும்போது அவர் நமக்கு தருகிற ஒரு ஒரு முக்கியமான வரம் **" அந்நிய பாஷை வரம் ".** பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தை பெற்றுக்கொள்கிற ஒவ்வொரு விசுவாசியும் அதனோடு அந்நிய பாஷை வரத்தையும் நிச்சயமாக பெற்றுக்கொள்கிறார்.

## மறுபடியும் பிறப்பதும், பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானமும்.

*யோவான்; 14; 17. உலகம் அந்தச் சத்திய ஆவியானவரைக் காணாமலும் அறியாமலும். இருக்கிறபடியால் அவரைப் பெற்றுக்கொள்ளமாட்டாது; அவர் உங்களுடனே வாசம்பண்ணி உங்களுக்குள்ளே இருப்பதால், நீங்கள் அவரை அறிவீர்கள;.*

இவ்வசனத்தை நாம் ஆங்கிலத்தில் படிப்போமானால் மிக எளிதாக மனதிலாகும்.

*John 14: 16-18 And as for myself, I will ask the Father, and another Counsellor of the same kind as I am He will give to you in order that He might be with you forever, the Spirit of the truth, whom the world is not able to receive because it does not see Him with discernment and does not know Him experientially. But, as for you, you know Him experientially, because* ***by your side He dwells, and in you He shall be.*** *I will not leave you behind, helpless. I come to you. (An Expanded Translation by Kenneth S. Wuest )*

*John 14:16-17 And I will pray the Father, and he shall give you another Comforter, that he may abide with you for ever; [17] Even the Spirit of truth; whom the world cannot receive, because it seeth him not, neither knoweth him: but ye know him; for* ***he dwelleth with you, and shall be in you. (kjv)***

ஆங்கிலத்தில் ***"he dwelleth with you, and shall be in you"*** என்ற வார்த்தைகள் இவ்வசனத்தின் கிரேக்க வார்த்தைகளை சரியான முறையில் மொழிபெயர்க்கின்றன. இந்த வசனத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் **dwelleth, with, shall, in** ஆகிய வார்த்தைகளுக்கான கிரேக்க வார்த்தைகள் முறையே **meno, para, esomai, en** என்பதாகும். இந்த வாக்கியத்தின் சரியான தமிழாக்கம் **"அவர் உங்களுடனே வாசம் பண்ணுகிறார், வருங் காலத்தில் உங்களுக்குள் இருப்பார்".** இந்த வாக்கியத்தின் அர்த்தத்தை முறையாக மனதிலாக்கிக்கொண்டால், ஒரு விசுவாசியின் வாழ்க்கையில் பரிசுத்த ஆவியானவர் கிரியை செய்யும் முக்கியமான இருவித நிலைகளை நாம் நன்றாக புரிந்து கொள்ளலாம்.

**முதல் நிலை;** ஒருவர் மறுபடியும் பிறக்கும் போது அதில் பரிசுத்த ஆவியின் கிரியை(**உங்களுடனே...with you** ).

**இரண்டாம் நிலை:** ஒருவர் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தை பெற்றுக்கொள்ளும்போது அதில் பரிசுத்த ஆவியின் கிரியை ( **உங்களுக்குள்.... in you** ).

ஒரு மனிதர் மறுபடியும் பிறப்பதில் பரிசுத்த ஆவியானவரின் பங்கு மிகவும் முக்கியமானது *( யோவான் 3:3,5; 6:44; எபே 1:13 ).* பரிசுத்த ஆவியானவரின் இந்த கிரியையை **"உங்களுடனே"** என்ற நிலைக்கு ஒப்பிடலாம். இது புரியாத பலரும் தாங்கள் மறுபடியும் பிறந்த போதே பரிசுத்த ஆவியைப்பெற்றுக்கொண்டோம் என்று சொல்வார்கள். வேதாகமத்தின் படி இது உண்மையல்ல. ஒருவர் மறுபடியும் பிறப்பதும், பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தை பெற்றுக்கொள்வதும் வேறுபட்ட இரு அனுபங்கள். ஒரு மனிதர் இரட்சிக்கப்பட்ட உடன் தானே பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தை பெற்றுக்கொள்ள முடியும். ஆனாலும் இவை இரண்டும் இரு வேறு நிலைகள். இயேசுவின் சீஷர்கள் எல்லோரும் மறுபடியும் பிறந்தவர்களே. அவர்கள் மறுபடியும் பிறந்ததில் பரிசுத்த ஆவியானவருக்கு முக்கிய பங்கு உண்டு. ஆனாலும் அவர்களிடம்தான் இயேசு கிறிஸ்து இக்காரியத்தை சொல்கிறார். வேதாகமத்தில் இன்னும் பல இடங்களில், மறுபடியும் பிறந்தவர்கள் அதன் பின் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தை பெற்றுக்கொண்டதற்கான உதாரணங்கள் உண்டு *( அப் 2:4; 8:16; 19:1 ).*

இன்னும் *ரோமர் 8:9ல்* இருந்தும் இதை மனதிலாக்கிக்கொள்ளலாம். *ரோம 8:9 தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால், நீங்கள் மாம்சத்துக்குட்பட்டவர்களாயிராமல் ஆவிக்குட்பட்டவர்களாயிருப்பீர்கள். கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவனல்ல.* இங்கே **"கிறிஸ்துவின் ஆவி"** என்பதை **"மறுபடியும் பிறக்கும்போது ஒருவர் பெற்றுக்கொள்ளுகிற மறுபடியும் பிறந்த ஆவி"** என்று எடுத்துக்கொள்ளலாம்( **உங்களுடனே...with you** ). அது போல, **"தேவனுடைய ஆவி"** என்பதை **"ஒருவர் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தை பெற்றுக்கொள்ளும் போது அவருக்குள் வந்து ஜீவிக்கிற பரிசுத்த ஆவி"** என்று எடுத்துக்கொள்ளலாம் ( **உங்களுக்குள்.... in you** ).

***யோவான்; 4;14;*** *நான் கொடுக்கும் தண்ணீரைக் குடிக்கிறவனுக்கோ ஒருக்காலும் தாகமுண்டாகாது; நான் அவனுக்குக்கொடுக்கும் தண்ணீர் அவனுக்குள்ளே நித்திய ஜீவகாலமாய் ஊறுகிற நீரூற்றாயிருக்கும் என்றார்.* - இங்கே இயேசு குறிப்பிடுகிற" நீரூற்று " நிலை...... " **உங்களுடனே...with you "** என்ற நிலை. இது ரட்சிப்பின் அனுபவத்தோடு பரிசுத்த ஆவியானவரின் பங்கை குறிப்பது.

***யோவான்; 7; 37.*** *பண்டிகையின் கடைசிநாளாகிய பிரதான நாளிலே இயேசு நின்று, சத்தமிட்டு: ஒருவன் தாகமாயிருந்தால் என்னிடத்தில் வந்து, பானம்பண்ணக்கடவன். 38. வேதவாக்கியம் சொல்லுகிறபடி என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும் என்றார்.*

*"ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும்* " ( **உங்களுக்குள்.... in you** ) என்ற நிலை பரிசுத்த ஆவியின் ஞானஸ் நானம் பெற்ற நிலையை குறிப்பவை.

## பரிசுத்த ஆவியின் ஞானஸ் நானத்தை தருகிறவர் யார்?

***மத்தேயு; 3;11.*** *மனந்திரும்புதலுக்கென்று நான் ஜலத்தினால் உங்களுக்கு ஞானஸ்நானங் கொடுக்கிறேன்; எனக்குப்பின் வருகிறவரோ என்னிலும் வல்லவராயிருக்கிறார், அவருடைய பாதரட்சைகளைச் சுமக்கிறதற்கு நான் பாத்திரன் அல்ல; அவர் பரிசுத்த ஆவியினாலும் அக்கினியினாலும் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பார்.*

***யோவான் 1;32 - 34.*** *32. பின்னும் யோவான் சாட்சியாகச் சொன்னது: ஆவியானவர் புறாவைப்போல வானத்திலிருந்திறங்கி, இவர்மேல் தங்கினதைக் கண்டேன். 33. நானும் இவரை அறியாதிருந்தேன்; ஆனாலும் ஜலத்தினால் ஞானஸ்நானங் கொடுக்கும்படி என்னை அனுப்பினவர்: ஆவியானவர் இறங்கி யார்மேல் தங்குவதை நீ காண்பாயோ, அவரே பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானங்கொடுக்கிறவர் என்று எனக்குச் சொல்லியிருந்தார்.*

இரட்சிக்கப்பட்ட ஒருவருக்கு எப்படி ஒரு ஊழியக்காரர் அல்லது ஒரு விசுவாசி தண்ணீர் முழுக்கு ஞானஸ்நானம் கொடுக்கிறாரோ, அது போலவே இரட்சிக்கப்பட்ட ஒருவருக்கு, அவர் கேட்கும்போது, **"இயேசு கிறிஸ்து"** பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் கொடுக்கிறார். *( மாற்கு 1:8 ).*

## யார் பரிசுத்த ஆவியின் ஞானஸ் நானம் பெற்றுக்கொள்ள முடியும்.

*அப் 2:17 கடைசிநாட்களில் நான் மாம்சமான யாவர்மேலும் என் ஆவியை ஊற்றுவேன், அப்பொழுது உங்கள் குமாரரும் உங்கள் குமாரத்திகளும் தீர்க்கதரிசனஞ்சொல்லுவார்கள்; உங்கள் வாலிபர் தரிசனங்களை அடைவார்கள்; உங்கள் மூப்பர் சொப்பனங்களைக் காண்பார்கள்;*

மறுபடியும் பிறந்த ஒவ்வொரு விசுவாசியும் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தை பெற்றுக்கொள்ள முடியும். பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் மறுபடியும் பிறந்த அனைத்து விசுவாசிகளுக்கும் உரியது. இதை ஒவ்வொரு இரட்சிக்கப்பட்ட விசுவாசியும் பெற்றுக்கொள்வதே தேவனின் சித்தம். ஆதி திருச்சபையில் இரட்சிக்கப்பட்ட ஒவ்வொரு விசுவாசியும் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தை பெற்றுக்கொள்ள கற்பிக்கப்பட்டார்கள். ***(மத் 3:11; யோவான் 1:33; 7:37-39; லூக்கா 11:9-13; 24:49; யோவான் 14:12; அப்போஸ்தலர் 1:4-8; 2: 16-21, 38-39; 5:32; 8:14-18; 9:17; 19:1-6 )***

## யார் பரிசுத்த ஆவியினால் ஞானஸ் நானம் பெற்றுக்கொள்ள முடியாது ?...ஏன் ?

ரட்சிக்கப்படாத - மறுபடியும் பிறக்காத யாரும் பரிசுத்த ஆவியின் ஞானஸ் நானம் பெற்றுக்கொள்ள முடியாது.

***யோவான்; 14; 16.*** *நான் பிதாவை வேண்டிக்கொள்ளுவேன், அப்பொழுது என்றென்றைக்கும் உங்களுடனேகூட இருக்கும்படிக்குச் சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார். 17.உலகம் அந்தச் சத்திய ஆவியானவரைக் காணாமலும் அறியாமலும். இருக்கிறபடியால் அவரைப் பெற்றுக்கொள்ளமாட்டாது; அவர் உங்களுடனே வாசம்பண்ணி உங்களுக்குள்ளே இருப்பதால், நீங்கள் அவரை அறிவீர்கள்.*

***1.கொரி; 2;14.*** *ஜென்மசுபாவமான மனுஷனோ தேவனுடைய ஆவிக்குரியவைகளை ஏற்றுக்கொள்ளான்; அவைகள் அவனுக்குப் பைத்தியமாகத் தோன்றும்; அவைகள் ஆவிக்கேற்றபிரகாரமாய் ஆராய்ந்து நிதானிக்கப்படுகிறவைகளானதால், அவைகளை அறியவுமாட்டான்.*

## பரிசுத்த ஆவியினால் ஞானஸ் நானம் பெற்றுக்கொள்ள தேவனிடம் கேட்டு, ஏதாவது துர் ஆவியை தவறாக பெற்றுக்கொள்ள முடியுமா ?

முடியாது. விசுவாசத்தோடு தேவனிடம் கேட்கிற யாரும் தேவனிடம் இருந்து ஒரு துர் ஆவியை பெற்றுக்கொள்ள முடியாது.

*லூக்கா; 11. 10-13.10. ஏனென்றால், கேட்கிறவன் எவனும் பெற்றுக்கொள்ளுகிறான்; தேடுகிறவன் கண்டடைகிறான்; தட்டுகிறவனுக்குத் திறக்கப்படும். 11. உங்களில் தகப்பனாயிருக்கிற ஒருவனிடத்தில் மகன் அப்பங்கேட்டால், அவனுக்குக் கல்லைக் கொடுப்பானா? மீனைக் கேட்டால் மீனுக்குப் பதிலாய்ப் பாம்பைக் கொடுப்பானா? 12. அல்லது முட்டையைக் கேட்டால், அவனுக்குத் தேளைக் கொடுப்பானா? 13. பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும்போது, பரமபிதாவானவர் தம்மிடத்தில் வேண்டிக் கொள்ளுகிறவர்களுக்குப் பரிசுத்த ஆவியைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா என்றார்.*

## பரிசுத்த ஆவியினாலும் அக்கினியினாலும் ஞானஸ்நானம்.

*மத் 3:11 மனந்திரும்புதலுக்கென்று நான் ஜலத்தினால் உங்களுக்கு ஞானஸ்நானங் கொடுக்கிறேன்; எனக்குப்பின் வருகிறவரோ என்னிலும் வல்லவராயிருக்கிறார், அவருடைய பாதரட்சைகளைச் சுமக்கிறதற்கு நான் பாத்திரன் அல்ல; அவர் பரிசுத்த ஆவியினாலும் அக்கினியினாலும் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பார்.*

*லூக் 3:16 யோவான் எல்லாருக்கும் பிரதியுத்தரமாக: நான் ஜலத்தினால் உங்களுக்கு ஞானஸ்நானங் கொடுக்கிறேன், என்னிலும் வல்லவர் ஒருவர் வருகிறார், அவருடைய பாதரட்சைகளின் வாரை அவிழ்க்கிறதற்கும் நான் பாத்திரன் அல்ல, அவர் பரிசுத்தஆவியினாலும் அக்கினியினாலும் உங்களுக்கு ஞானஸ்நானங் கொடுப்பார்.*

இந்நிகழ்ச்சியை குறிப்பிடுகிற ***மாற்கு 1:8***, ***யோவான் 1:32-34*** போன்ற மற்ற வசனங்கள் **"அக்கினியினாலும்"** என்ற வார்த்தையை உபயோகிக்க வில்லை. சில வேதாகம விளக்கவுரையாளர்கள் இந்த "அக்கினியை" இயேசுவை ஏற்றுக்கொள்ளாதவர்கள் மீதான நியாயத்தீர்ப்பு என்று கூறுகிறார்கள். ஏனென்றால் இவ்வசனங்களை தொடர்ந்து வருகிற அடுத்த வசனங்களாகிய ***மத்தேயு 3:12, லூக்கா 3:17*** ஆகிய இரு இடங்களிலும் "பதரை அவியாத அக்கினியில் சுட்டெரிப்பார்" என்று நியாயத்தீர்ப்பை பற்றி யோவான் கூறுகிறார். ஆகவே 'வசனங்களை வியாக்யானம் செய்யும்போது அதன் மேலும் கீழும் உள்ள வசனங்களையும் சேர்த்து பார்க்க வேண்டும்' என்ற விதியின் படி பார்ப்போமானால், அக்கினி என்பது நியாயத்தீர்ப்பு என்று சிலர் சொல்வது சரியானதே. வேறு சிலர் இது ***மல்கியா 3:2-3*** ல் குறிப்பிடப்பட்டிருக்கின்ற "புடமிட்டு சுத்திகரிக்கும்" அக்கினியை குறிப்பிடுவதாக சொல்கிறார்கள். வேறு சிலர் ***அப் 2:3 ல்*** குறிப்பிடப்பட்டுள்ள "அக்கினி மயமான நாவுகளை" குறிப்பிடுவதாக சொல்கிறார்கள். வேறு சிலர் பரிசுத்த ஆவியானவர், பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானத்துடன் நமக்கு தருகிற வல்லமை, பெலன், சக்தி போன்றவற்றையே இந்த 'அக்கினி' குறிப்பிடுவதாக சொல்கிறார்கள். வேறு சிலர் இது சொல்லெச்சம் (தொக்கி நிற்கிற வார்த்தைகள் - elliptical form of speech ) என்று கூறுகிறார்கள். அதாவது, பரிசுத்த ஆவியும் அக்கினியும் ஒன்றே ( மனிதரை முழுவதுமாக புடமிடுகிற பரிசுத்த ஆவியானவர் ) என்று கூறுகிறார்கள்.

## பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ள "காத்திருக்க (tarrying) வேண்டுமா ?

*லூக் 24:49 என் பிதா வாக்குத்தத்தம்பண்ணினதை, இதோ, நான் உங்களுக்கு அனுப்புகிறேன். நீங்களோ உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படும்வரைக்கும் எருசலேம் நகரத்தில் இருங்கள் என்றார்.*

சிலர் இவ்வசனத்தை எடுத்து, 'பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ள தேவ சமூகத்தில் காத்திருக்க வேண்டும்' என்று சொல்லுவது உண்டு. இவ்வசனத்தை சரியாக ஒரு முறை கூட படித்து பாருங்கள். தமிழ் வேதாகமத்தில் **'காத்திருங்கள்'** என்ற வார்த்தையே இல்லை. ஆங்கில வேதாகமத்தில் "tarry" என்ற வார்த்தை இருக்கிறது. இதன் அர்த்தம் 'இருங்கள்' என்பதே. இந்த வசனத்தை எடுத்து, நீங்கள் காத்திருக்க வேண்டும் என்று யாராவது சொன்னால் அவர் அதனோடு தொடர்ந்து சொல்ல வேண்டும், " நீங்கள் எருசலேம் நகரத்தில் சென்று காத்திருக்க வேண்டும் ". ஏனென்றால் வசனம் "எருசலேம் நகரத்தில் இருங்கள்" என்று அல்லவா சொல்கிறது. நாம் நன்றாக புரிந்து கொள்ளவேண்டும், இந்த கட்டளை, இயேசு கிறிஸ்து தன் சீஷர்கள் முதன் முதலாக பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளும்படியாக, பரிசுத்த ஆவியானவர் உலகத்தில் முதன் முதலாக கொடுக்கப்படுவது வரை, எருசலேமுக்கு சென்று அங்கு காத்திருங்கள் என்று குறிப்பாக கொடுக்கப்பட்ட கட்டளை. இயேசு தான் உயிர்த்தெழுந்த பிறகு செய்த 40 நாட்கள் ஊழியத்தின் கடைசியில் இந்த கட்டளையை கொடுக்கிறார். பெந்தெகோஸ்து நாள், அறுப்பின் முதல் பலன் பண்டிகையில் இருந்து 50வது நாளில் அனுசரிக்கப்பட வேண்டும். அது போலவே பரிசுத்த ஆவியானவரும் இயேசுவின் உயிர்த்தெழுதலுக்கு பிறகு 50வது நாளில் உலகத்துக்கு வரவேண்டும் என்று தேவன் முன்குறித்திருந்தார். ஆகவே இந்த இடைப்பட்ட 10 நாட்களில், சீஷர்கள் எருசலேமில் காத்திருக்கும்படியாக இயேசு சொல்கிறார். இது எல்லோருக்கும் பொதுவான கட்டளை அல்ல. இது வரிப்பணம் கொடுக்க இயேசு பேதுருவிடம், தூண்டில் போட்டு மீன் பிடித்து அதனுள் இருக்கும் பணத்தை எடுத்து கொடுக்க சொன்னது போல, ஒரு குறிப்பிட்ட கட்டளை. இன்று வரிப்பணம் கொடுக்க வேண்டியவர்கள் எல்லாம் தூண்டில் போட்டு மீன் பிடிக்க வேண்டும் என்று வியாக்யானம் செய்ய முடியாது. சீஷர்கள் காத்திருக்க வேண்டும், ஏனென்றால் பெந்தேகோஸ்து நாள்வரை பரிசுத்த ஆவியானவர் அருளப்படவில்லை. பெந்தேகோஸ்து நாளில் பரிசுத்த ஆவியானவர் அருளப்பட்டார். யோவேல் தீர்க்க தரிசனம் நிறைவேறிற்று. இப்போது பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் யாருக்கெல்லாம் (

இரட்சிக்கப்பட்டவர்கள். ***யோவான் 14:17*** ) வேண்டுமோ அவர்கள் எல்லோரும் விசுவாசத்தோடு கேட்டு ***( யாக் 1:6-7)*** பெற்றுக்கொள்ளலாம். அது எல்லா விசுவாசிகளுக்கும் உள்ளது.

***அப் 19:1-6.*** *அப் 19:6 அல்லாமலும் பவுல் அவர்கள்மேல் கைகளை வைத்தபோது, பரிசுத்தஆவி அவர்கள்மேல் வந்தார்; அப்பொழுது அவர்கள் அந்நியபாஷைகளைப் பேசித்தீர்க்கதரிசனஞ் சொன்னார்கள்.* இந்த இடத்தில் சுமார் 12 விசுவாசிகள் பரிசுத்த ஆவியைப்பெற்றுக்கொண்ட நிகழ்ச்சி குறிப்பிடப்பட்டிருக்கிறது.

*அப் 10:44 இந்த வார்த்தைகளைப் பேதுரு பேசிக்கொண்டிருக்கையில் வசனத்தைக்கேட்டவர்கள் யாவர்மேலும் பரிசுத்த ஆவியானவர் இறங்கினார்.* இந்த இடங்களில் எல்லாம் இவர்கள் யாரும் காத்திருக்கவில்லை. உடனடியாக பெற்றுக்கொண்டார்கள். **நீங்களும் அவ்வாறே வசனத்தின் அடிப்படையில் பெற்றுக்கொள்ள முடியும்.**

## பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ள முதலில் நம்மை பரிசுத்தப்படுத்திக்கொள்ள வேண்டுமா ?

இதற்கான பதிலை நாம் வேதாகமத்தின் அடிப்படையில் பார்ப்போம். அதற்கு முன் நாம் மனதிலாக்கிக்கொள்ள வேண்டும், **ஒரு விசுவாசி எந்த விதத்திலும் பாவத்துக்கு தன்னை விலக்கி பாதுகாத்துக்கொள்ள வேண்டும். பாவத்தின் சம்பளம் என்றுமே மரணம்தான் *( ரோமர் 6:23, யோவான் 10:10 ).* ஒரு விசுவாசி பாவம் செய்யக்கூடாது, செய்தால் அவர் சாத்தானுக்கு அடிமையாவார் *(ரோமர் 6:16 ),* அதனால் சாத்தான் அவரது வாழ்க்கையில் நோய், அழிவு, துன்பம் கொண்டு வர முடியும் *( யோவான் 10:10 ).* ஆகையால் ஒரு விசுவாசி எப்போதும் தேவன் தனக்கு தந்திருக்கிற பரிசுத்தத்தில் தன்னை காத்து பரிசுத்தமாக வாழ வேண்டும் *(1 கொரி 3:17; எபே 1:4; 4:30; 1 பேதுரு 1:15; வெளி 22:11 ).***

சிலர் சொல்வதை நான் கேட்டிருக்கிறேன், "ஒரு அழுக்கான பாத்திரத்தில் நாம் சுத்த நீரை விடுவோமா? அது போலத்தான் ஒருவர் தன்னை முற்றிலுமாக பரிசுத்தப்படுத்திக்கொள்ளாத வரை பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ள முடியாது" என்று. இதை மேலோட்டமாக பார்க்கும்போது இது ஒரு நல்ல போதனைதானே என்று தோன்றும். ஆனால் இது வேதாகமத்துக்கு மிகவும் எதிரான போதனை. இந்த போதனை, **"கிருபையினால் நீதிகரணம்"** என்கிற - கிறிஸ்தவத்தில் மாத்திரமே இருக்கிற, மற்ற மதங்களுக்கும் கிறிஸ்தவத்துக்கும் இருக்கிற ஒரு முக்கிய வேறுபாடான, இயேசுவின் மரணம் உயிர்த்தெழுதல் இவற்றின் மூலமாக கிடைக்கிற - வேதாகம போதனைக்கு முற்றிலும் மாறுபட்டது. இது "நியாயப்பிரமாண போதகர்களின் போதனை" ***( 1 தீமோ 1:7 ).*** இத்தகைய போதகர்கள் எப்போதும் கிருபையை எதிர்த்தே நிற்பார்கள். கிருபையை அடிப்படையாக வைத்து சொல்லப்படும் எந்த ஒரு கருத்தும் இவர்களை அதிகமாக கோபப்படுத்தும். உடனடியாக கிருபையை பற்றி பேசுகிறவர்களை உபத்திரவிப்பார்கள். இவ்வாறே பவுல் அப்போஸ்தலனுக்கு செய்தார்கள் ***(ரோமர் 3:8; கலா 5:11),*** இயேசு கிறிஸ்துவுக்கும் செய்தார்கள். நான் ஒரு முறை சகோதரனிடம் *"1தீமோ 2:5 தேவன் ஒருவரே, தேவனுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்தரும் ஒருவரே. 6 எல்லாரையும் மீட்கும்பொருளாகத் தம்மை ஒப்புக்கொடுத்த மனுஷனாகிய கிறிஸ்து இயேசு அவரே; இதற்குரிய சாட்சி ஏற்ற காலங்களில் விளங்கிவருகிறது."* என்ற வசனத்தின் அடிப்படையில் இயேசு கிறிஸ்துவை பற்றி பேசிக்கொண்டிருந்த போது அவர் கேட்டார் "தாய் இல்லாமல் எப்படி பிள்ளை வர முடியும் ?" என்று. அதற்கு நான் அவரிடம் பதில் சொன்னேன், 'சகோதரா, நான் தேவனுடைய வசனத்தின் அடிப்படையில் பேசிக்கொண்டிருக்கிறேன், நீங்கள் உலக வழக்கத்தின் அடிப்படையில் பேசிக்கொண்டிருக்கிறீர்கள்" என்று. இது போலத்தான் "ஒரு அழுக்கான பாத்திரத்தில் நாம் சுத்த நீரை விடுவோமா ?" என்ற கேள்வி உலக வழக்கத்தின் அடிப்படையில் ஆனது. ஆனால் வேதாகமத்தில் ***"யோவான் 7:38*** *வேதவாக்கியம் சொல்லுகிறபடி என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும் என்றார்."* என்று படித்து விட்டு அதன்படி பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தை கேட்பது தேவனுடைய வசனத்தின் அடிப்படையில் ஆனது. ஒருவர் உலக வழக்கத்தின் அடிப்படையில் கேட்டால் நிச்சயமாக அவரால் பெற்றுக்கொள்ள முடியாது. இதனால்தான் பலரும் பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானத்தை பெற்றுக்கொண்டு ஒரு வல்லமை உள்ள விசுவாசியாக வாழ முடியாமல், ஒரு சாதாரண விசுவாசியாக பெலன் இன்றி வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். ஒருவேளை ஒருவர் உலக வழக்கப்படி பார்த்தாலும் ***ஒரு அழுக்கான பாத்திரத்தை சுத்தப்படுத்த வேண்டுமென்றால் அதில் சுத்தமான நீரை உபயோகித்து கழுவினால்தானே அது சுத்தமாகும்.*** ஒரு இருட்டறையில் இருந்து இருளைப்போக்க வேண்டுமென்றால் அதற்கு நல்ல வழி, அந்த அறையில் ஒரு மின்சார விளக்கை போடுவது. அப்போது இருள் தானே ஓடி விடும். இருளை எல்லாம் அகற்றி விட்டு பின் வெளிச்சத்தை கொண்டு வர முடியுமா ?

பவுல் அப்போஸ்தலன் கலாத்தியருக்கு எழுதிய நிருபம் 3 வது அதிகாரத்தில், பரிசுத்த ஆவியை ஏற்கனவே பெற்றிருந்த அந்த விசுவாசிகளிடம், அவர்கள் எவ்வாறு பரிசுத்த ஆவியைப்பெற்றுக்கொண்டார்கள் என்று கேட்கிறார்.

*கலா 3:1 புத்தியில்லாத காலத்தியரே, நீங்கள் சத்தியத்திற்குக் கீழ்ப்படியாமற்போகத்தக்கதாக உங்களை மயக்கினவன் யார்? இயேசுகிறிஸ்து சிலுவையிலறையப்பட்டவராக உங்கள் கண்களுக்குமுன் பிரத்தியட்சமாய் உங்களுக்குள்ளே வெளிப்படுத்தப்பட்டிருந்தாரே. 2 ஒன்றைமாத்திரம் உங்களிடத்தில் அறிய விரும்புகிறேன்; நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலேயோ, விசுவாசக் கேள்வியினாலேயோ, எதினாலே ஆவியைப் பெற்றீர்கள்? 3 ஆவியினாலே ஆரம்பம்பண்ணின நீங்கள் இப்பொழுது மாம்சத்தினாலே முடிவுபெறப்*

*போகிறீர்களோ? நீங்கள் இத்தனை புத்தியீனரா? 4 இத்தனை பாடுகளையும் வீணாய்ப் பட்டீர்களோ? அவைகள் வீணாய்ப்போயிற்றே. 5 அன்றியும் உங்களுக்கு ஆவியை அளித்து, உங்களுக்குள்ளே அற்புதங்களை நடப்பிக்கிறவர் அதை நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலேயோ, விசுவாசக் கேள்வியினாலேயோ, எதினாலே செய்கிறார்?*
*6 அப்படியே ஆபிரகாம் தேவனை விசுவாசித்தான், அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது.*
*7 ஆகையால் விசுவாசமார்க்கத்தார்கள் எவர்களோ அவர்களே ஆபிரகாமின் பிள்ளைகளென்று அறிவீர்களாக.*

தேவனிடம் இருந்து நாம் எதைப்பெற்றுக்கொள்ள வேண்டுமானாலும் அதை **"கிருபையினால் விசுவாசத்தைக் கொண்டு"** என்ற தத்துவத்தின் அடிப்படையில் மாத்திரமே பெற்றுக்கொள்ள முடியும். அதனுடன் நம் சுய நீதிகரணம், சுய பரிசுத்தம், சுய கிரியைகள் என்று எதையாவது கூட்டினால், நாம் கிறிஸ்துவை விட்டு பிரிந்து விடுகிறோம். கிருபையை வீணாக்கி விடுகிறோம் *( கலா 2:21; 5:4 ). கொலோசெயர் 2:6* சொல்லுகிறது *"ஆகையால், நீங்கள் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை ஏற்றுக்கொண்டபடியே, அவருக்குள் வேர்கொண்டவர்களாகவும், அவர்மேல் கட்டப்பட்டவர்களாகவும், அவருக்குள் நடந்துகொண்டு,".* நாம் எப்படி இயேசுவை ஏற்றுக்கொண்டோமோ, அப்படியே விசுவாச வாழ்க்கையை தொடர்ந்து வாழ வேண்டும். நாம் இயேசுவை ஏற்றுக்கொள்வது **"கிருபையினால் விசுவாசத்தைக்கொண்டு"** *( எபே 2:8);* இனியுள்ள விசுவாச வாழ்க்கையை தொடர்ந்து வாழ்வதும் "கிருபையினால் விசுவாசத்தைக்கொண்டு" மாத்திரமே. கலாத்திய விசுவாசிகள் பரிசுத்த ஆவியை பெற்றுக்கொண்டது கிருபையினால் விசுவாசத்தை கொண்டு மாத்திரமே. அவர்கள் தங்களை பரிசுத்தப் படுத்திக்கொண்ட பிறகு அல்ல. ஒரு மனிதர் தன்னுடைய கிரியைகளால் தன்னைத்தான் பரிசுத்தப் படுத்திக் கொள்ள முயற்சிப்பது நியாயப்பிரமாணம். இதைத்தான் மற்ற பல மதங்களும் போதிக்கின்றன. ஆனால் ஒரு மனிதர் **"விசுவாசத்தால் பரிசுத்தவான் ஆவதே"** தேவனுடைய பிரமாணம். மற்ற மதங்களுக்கும் நமக்கும் இருக்கிற ஒரு பிரதான வேறுபாடு "நமக்கு ஒரு ரட்சகர் இருக்கிறார்" என்பதே *( ரோமர் 3:21-30; 5:17,19; கலா 3:11; தீத்து 3:5; 2 கொரி 5:21; பிலி 3:9; 1 கொரி 6:11; எபி 10:10,14,29; யூதா 1:1 ).*

இரட்சிக்கப்பட்ட அருமை சகோதரா, சகோதரி ! ஒரு வேளை உங்களது வாழ்க்கையில் இன்னும் பாவங்களும் மாம்சமும் உங்களை வீழ்த்திக்கொண்டிருக்கிறது என்றால் உடனடியாக பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தை பெற்றுக்கொள்ளுங்கள். நீங்கள் இரட்சிக்கப்பட்டபோது நீங்கள் எப்படி "நீங்கள் இருந்த நிலையிலேயே" ( Just as i am without one plea) இயேசுவிடம் ஓடி வந்தீர்களோ - அவரது இரத்தத்தால் பாவமற கழுவப் பட்டீர்களோ, நீதிமான்களாக்கப்பட்டீர்களோ, பாவத்தின் மேல் ஜெயம் கண்டீர்களோ - அது போலவே இப்போதும் இயேசுவிடம் கேளுங்கள். **பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தை பெற்றுக்கொள்ளுங்கள். அவர், உங்களை இன்னும் வீழ்த்திக்கொண்டிருக்கும் பாவங்களில் இருந்தும் மாம்ச இச்சைகளில் இருந்தும் உங்களை பாதுகாத்து, பரிசுத்தப்படுத்துவார். பரிசுத்த ஆவியானவரோடு நீங்கள் ஒத்துழைக்கும்போது, அவர் உங்களை முற்றிலும் பரிசுத்தவானாக வாழ உதவி செய்வார்.** *கலா 5:16 பின்னும் நான் சொல்லுகிறதென்னவென்றால், ஆவிக்கேற்படி நடந்துகொள்ளுங்கள், அப்பொழுது மாம்ச இச்சையை நிறைவேற்றாதிருப்பீர்கள். ( ரோமர் 8:1,2,4-5,9,14,26 யோவா 14:16, 26 16:3 அப் 1:8 )*

## பரிசுத்த ஆவியினால் ஞானஸ் நானத்தை தண்ணீர் முழுக்கு ஞானஸ்நானத்துக்கு முன்பு அல்லது பின்பு, எப்போது பெற்றுக்கொள்ள முடியும் ?

தண்ணீர் முழுக்கு ஞானஸ்நானம் வேதாகமத்தின் கட்டளை அதை ஒரு விசுவாசி பெற்றுக்கொள்ள வேண்டும். ஆனால் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தை, தண்ணீர் முழுக்கு ஞானஸ்நானத்துக்கு முன்போ அல்லது பின்போ ஒரு விசுவாசி பெற்றுக்கொள்ள முடியும்.

வேதாகமத்தில் உதாரணங்கள்.

**தண்ணீர் முழுக்கு ஞானஸ்நானத்துக்கு முன்பு;** *அப் 10:47,*

**தண்ணீர் முழுக்கு ஞானஸ்நானத்துக்கு பின்பு;** *அப் 8:15-17, 19:5-6.*

## பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானத்தை பெற்றுக்கொள்ள வேண்டுமானால் ஒரு ஊழியக்காரர் நம் தலை மேல் கைகளை வைத்து ஜெபிக்க வேண்டுமா ?

வேதாகமத்தில் அப்போஸ்தலர் "அவர்கள் மேல் கைகளை வைத்தார்கள்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. "தலைமேல் கைகளை வைத்தார்கள்" என்று குறிப்பிடப்படவில்லை.

*அப் 8:17 அவர்கள்மேல் கைகளை வைத்தார்கள், அப்பொழுது அவர்கள் பரிசுத்தஆவியைப் பெற்றார்கள்.*

*அப் 19:6 அல்லாமலும் பவுல் அவர்கள்மேல் கைகளை வைத்தபோது, பரிசுத்தஆவி அவர்கள்மேல் வந்தார்; அப்பொழுது அவர்கள் அந்நியபாஷைகளைப் பேசித்தீர்க்கதரிசனஞ் சொன்னார்கள்.*

வேதாகமத்தில் பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் நடைபெற்ற, அல்லது சொல்லப்பட்டிருக்கிற இடங்களில் "கைகளை வைத்து பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம்" என்பது சொல்லப்படவில்லை. இந்த இரண்டு சம்பவங்களுக்கும் பின்னால் சில காரியங்கள் உண்டு. முதலாவது அப்போஸ்தலர் 8 ம் அதிகாரத்தில் குறிப்பிடப்

பட்டிருக்கும் சமாரியர், எருசலேம் தேவாலயத்தின் அதிகாரத்தை ஏற்றுக்கொள்ள வில்லை. கைகளை வைப்பது என்பது 'ஏற்றுக்கொள்வது' அல்லது 'கீழ்ப்படிவது' என்பதற்கு நல்ல அடையாளம். இங்கே இந்த சமாரியர் எருசலேமில் இப்போது உள்ள சபையின் அதிகாரத்தை ஏற்றுக்கொண்டு, அதனால் எருசலேமில் இருந்து வந்த அப்போஸ்தலர் தங்களது தலையில் கைவைத்த போது, அவர்கள் கீழ்ப்படிந்து, வேற்றுமைகளை மறந்தார்கள். பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டார்கள். இரண்டாவது அப்போஸ்தலர் 19ல் குறிப்பிடப் பட்டுள்ள இந்த ஆசிய நாட்டு யூதர்களும் இப்போது ஒரு புதிய அதிகாரத்தின் கீழ், எருசலேமில் இருக்கிற சபையின் கீழ் வரும்படியாக அவர்கள் மேல் கைகள் வைக்கப்பட்டது என்றும் எடுத்துக்கொள்ளலாம். இப்போது அப்படிப்பட்ட நிபந்தனைகள் ஏதுமின்றி, நாம் முன்பே குறிப்பிட்ட படி அனைத்து விசுவாசிகளும் தாங்களாகவே விசுவாசத்தோடு தேவனிடம் கேட்டு பெற்றுக்கொள்ளலாம்.

## பரிசுத்த ஆவியினால் ஞானஸ் நானம் பெற்றுக்கொள்வது எப்படி..?

ரட்சிக்கப்பட்ட ஒவ்வொருவரும் தேவனுடைய பிள்ளை.

***யோவான்; 1;12.*** *அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக் கொண்டவர்கள் எத்தனைபேர்களோ, அத்தனைபேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங் கொடுத்தார்.*

***கலாத்தியர்; 3;26.*** *நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவைப்பற்றும் விசுவாசத்தினால் தேவனுடைய புத்திரராயிருக்கிறீர்களே.* ***( ரோமர்; 8;16, 1 யோவான்; 3;10, 4;4, 1 தெச; 5;5.)***

தேவனுடைய பிள்ளையான உங்களுக்கு, இந்த பரிசுத்த ஆவியின் ஞானஸ் நானத்தை தர **அவர்** விரும்புகிறார்.

***லூக்கா; 11. 9.*** *மேலும் நான் உங்களுக்குச் சொல்லுகிறதாவது: கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்; தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; தட்டுங்கள், அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும்.*
*10. ஏனென்றால், கேட்கிறவன் எவனும் பெற்றுக்கொள்ளுகிறான்; தேடுகிறவன் கண்டடைகிறான்; தட்டுகிறவனுக்குத் திறக்கப்படும்.*
*11. உங்களில் தகப்பனாயிருக்கிற ஒருவனிடத்தில் மகன் அப்பங்கேட்டால், அவனுக்குக் கல்லைக் கொடுப்பானா? மீனைக் கேட்டால் மீனுக்குப் பதிலாய்ப் பாம்பைக் கொடுப்பானா?*
*12. அல்லது முட்டையைக் கேட்டால், அவனுக்குத் தேளைக் கொடுப்பானா?*
*13. பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும்போது, பரமபிதாவானவர் தம்மிடத்தில் வேண்டிக் கொள்ளுகிறவர்களுக்குப் பரிசுத்த ஆவியைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா என்றார்.*

***யோவான்; 7; 37 - 39.*** *37. பண்டிகையின் கடைசிநாளாகிய பிரதான நாளிலே இயேசு நின்று, சத்தமிட்டு: ஒருவன் தாகமாயிருந்தால் என்னிடத்தில் வந்து, பானம்பண்ணக்கடவன்.*
*38. வேதவாக்கியம் சொல்லுகிறபடி என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும் என்றார். 39. தம்மை விசுவாசிக்கிறவர்கள் அடையப்போகிற ஆவியைக்குறித்து இப்படிச்சொன்னார். இயேசு இன்னும் மகிமைப்படாதிருந்தபடியினால் பரிசுத்தஆவி இன்னும் அருளப்படவில்லை.*

**நீங்கள் செய்ய வேண்டியது எல்லாம், கேளுங்கள்,,,,,,விசுவாசியுங்கள்,,,,,,,, பெற்றுக்கொள்ளுங்கள்.**

***மாற்கு 11;24.*** *ஆதலால், நீங்கள் ஜெபம்பண்ணும் போது எவைகளைக் கேட்டுக்கொள்வீர்களோ, அவைகளைப் பெற்றுக்கொள்வோம் என்று விசுவாசியுங்கள், அப்பொழுது அவைகள் உங்களுக்கு உண்டாகும் என்று சொல்லுகிறேன்.*

*யாக் 1:6 ஆனாலும் அவன் எவ்வளவாகிலும் சந்தேகப்படாமல் விசுவாசத்தோடே கேட்கக்கடவன்; சந்தேகப்படுகிறவன் காற்றினால் அடிபட்டு அலைகிற கடலின் அலைக்கு ஒப்பாயிருக்கிறான்.*
*7 அப்படிப்பட்ட மனுஷன் தான் கர்த்தரிடத்தில் எதையாகிலும் பெறலாமென்று நினையாதிருப்பானாக.*

மகாப்பெரிய ஊழியக்காரராகிய ஸ்மித் விகிள்ஸ்வொர்த் தன்னுடைய "வரங்கள்" என்ற புத்தகத்தில் இப்படியாக சொல்கிறார், "நீங்கள் இரண்டு முறை கேட்டால், ஒரு வரத்தை ஒருபோதும் பெற்றுகொள்ள மாட்டீர்கள்" என்று.

நீங்கள் பரிசுத்த ஆவியின் ஞானஸ் நானத்தை தேவனிடம் விசுவாசத்தோடு கேட்டீர்கள் என்றால், ... பெற்றுக்கொண்டீர்கள்....விசுவாசியுங்கள்... தேவனை ஆராதிக்க ஆரம்பியுங்கள்....நீங்கள் ஒரு பாடல் எழுதும் போது எப்படி முதலில் அதன் கருப்பொருளை ஒரு உள்ளுணர்வாக பெற்று பின்அதை வார்த்தையால் எழுது கிறீர்களோ, அது போல பரிசுத்த ஆவி தருகிற உள்ளுணர்வுகளுக்கு உங்கள் சத்தத்தை, நாவை, வாயை, வார்த்தைகளை கொடுங்கள்....பேசுங்கள். நீங்கள் மனதிலோ,சரீரத்திலோ ஏதாவது உணர்வுகள், அனுபவங்கள் பெறலாம், பெறாமலும் இருக்கலாம். அது ஒரு முக்கியமான தேவையோ, அம்சமோ அல்ல. ..நீங்கள் நீங்கள் பரிசுத்த ஆவியின் ஞானஸ் நானத்தை தேவனிடம் விசுவாசத்தோடு கேட்டீர்கள் என்றால்,... பெற்றுக் கொண்டீர்கள்....விசுவாசியுங்கள்... **மீண்டும் கேட்க தேவை இல்லை.**

அன்பு சகோதரா! சகோதரி! **இதுவரை நீங்கள் இயேசுவை உங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு மறுபடியும் பிறக்காவிட்டால், உடனே இரட்சிக்கப்படுங்கள்.** இது பரலோகத்துக்கும், நரகத்துக்கும் உள்ள வேறுபாடு. "மறுபடியும் பிறக்காமல்" நீங்கள் செய்யும் எந்த நல்லகாரியங்களும் - சபை காரியங்களோ, கிறிஸ்தவ குடும்பத்தில் பிறப்பதோ, ஒரு கிறிஸ்தவ சபையில் அங்கத்தினராக இருப்பதோ - உங்களை பரலோகத்துக்கு அழைத்து செல்ல முடியாது. இதை வேதாகமத்தில், பரலோகத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் உள்ள

இயேசு தெளிவாக சொல்லியிருக்கிறார் ***( யோவான் 3:3).*** **நீங்கள் இரட்சிக்கப்பட்டவராக இருந்தால் பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானத்தை பெற்றுக்கொள்ளுங்கள்.** அந்நிய பாஷையில் பேசுங்கள். இது ஒரு வல்லமையான, சாட்சியுள்ள, வெற்றிகரமான, தேவனுடைய சித்தப்படியான விசுவாச வாழ்க்கையின் தொடக்கமாக இருக்கும்.

**ஆமென்.**
**தேவன் உங்களை ஆசீர்வதித்திருக்கிறார். ஆசீர்வாதமாக இருங்கள்.**

**Br. D.Vergin Kumar.**
If you need any clarifications kindly contact me in **deeveekumar@yahoo.com** Ph; 00968. 25572195, 99663557.

**Resources;** Dakes bible commentary, Andrew Wommack bible commentary, International Standard Bible Encyclopedia (Revised), Adam Clarke's Bible commentary, Wuest's bible commentary, Strong's Bible concordance, Vine's expository dictionary of the New Testament, Wuest's word studies from the Greek New Testament, Interlinear bible, Don krow's D.E.Lessons, All bible quotes are referred from King James Version bible, Tamil Bible, unless quoted otherwise.